Kanchipuram District

# இரண்டாம் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி | பகுதி - I | மதிப்பெண்கள் : 90

I. பலவுள் தெரிக: 14 x 1 = 14

1. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்
காரணம் : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.
அ) கூற்று சரி ; காரணம் தவறு ஆ) இரண்டும் சரி
இ) இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ) கூற்று தவறு ; காரணம் சரி

2. "கபாட புரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடிமோனையைத் தெரிவு செய்க.
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

3. "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" என்னும் நூலின் ஆசிரியர்
அ) இந்திரன் ஆ) வால்ட் விட்மன் இ) கீட்ஸ் ஈ) பாப்லோ நெருடா

4. தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்ட வழிநூல்
அ) தண்டி ஆ) யாப்பு இ) நன்னூல் ஈ) காரிகை

5. தமிழர் பாரம்பரிய நாள் ______.
அ) ஜனவரி 14 ஆ) ஆகஸ்ட் 14 இ) செப்டம்பர் 14 ஈ) அக்டோபர் 14

6. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
அ) ஏதிலிக்குருகள் - மரபுக்கவிதை
ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை
இ) யானை டாக்டர் - குறும் புதினம்
ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

7. வாழ்வியல் நெறிகளைப் பேசும் நூல் எது?
அ) புறநானூறு ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) பதிற்றுப்பத்து

8. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்றேதான் - இக்கவிதையில் பயின்று வருவது
அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

9. 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

10. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு
அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்
இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

11. தமிழின் முதல் பாவடிவ நாடக நூல்
அ) இரகசிய வழி ஆ) மனோன்மணியம்
இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

12. *கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க :*
அ) விரியன் - 1) தண்டை
ஆ) திருகுமுருகு - 2) காலாழி
இ) நாங்கூழ்ப்புழு - 3) சிலம்பு
ஈ) குண்டலப்பூச்சி - 4) பாடகம்
அ) 3 4 2 1 ஆ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 4 1 3 2

13. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

14. காட்டின் மூலவர் ________.

அ) யானை ஆ) குதிரை இ) புலி ஈ) சிங்கம்

பகுதி - II

பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக : 3 x 2 = 6**

15. உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?
16. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
17. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?
18. செந்துறைப் பாடாண் பாட்டு - துறை விளக்கம் தருக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக : 2 x 2 = 4**

19. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
20. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?
21. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக : 7 x 2 = 14**

22. ***பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக :***
    அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
    ஆ) முயற்சி செஞ்சா அதுகேத்த பலன் வராமப் போவாது.
23. ***தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.***
    அ) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?
    ஆ) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்
24. ***கீழ்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.***
    அ) சங்கீதம் ஆ) மகாஜனம்
25. ***மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக :***
    கலை, களை, கழை
26. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
27. ***ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக :***
    அ) அலர்ந்து ஆ) ஏகுமின்
28. ***ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக :***
    அ) ஞாயிற்றுச் செலவு ஆ) பேரழகு
29. ***கலைச்சொல்லாக்கம் தருக :***
    அ) Passport ஆ) Doctor of Philosophy
30. ***கலவைத் தொடராக மாற்றுக :***
    மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை, மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

பகுதி - III

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக : 2 x 4 = 8**

31. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
    அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
33. மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?
34. தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக : 2 x 4 = 8**

35. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



36. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

37. "நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்" - இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.

38. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.

பகுதி - IV

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக :** **3 x 4 = 12**

39. பிறிது மொழிதல் அணி *(அல்லது)*
சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.

40. **இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.**

தண்டலை மயில்கள் ஆட
 தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க
 குவளைகண் விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்ட
 தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
 மருதம் வீற்றிருக்கும் மாதோ" - கம்பர்

41. பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

பாடாண் திணையைச் சான்று காட்டி விளக்குக.

42. **புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)
அ) கண்ணிலும் எழுதலாம் ; வெண் தாளிலும் எழுதலாம் ________.
ஆ) அறிவின் பெயரும் அதுதான் ; அம்புலியின் பெயரும் அதுவே தான் ________.
இ) பூவின் உறுப்பும் நானே ; புன்னகையின் பிறப்பிடமும் நானே ________.
ஈ) வண்டியையும் இயக்கும் ; பெரும் கப்பலையும் தாங்கும் ________.

43. **தமிழாக்கம் தருக :**
அ) An eye for an eye only ends up making, the whole world blind.
ஆ) You must be the change you wish to see in the world.
இ) The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
ஈ) Nobody can hurt me without my permission.

பகுதி - V

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3 x 6 = 18**

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க. *(அல்லது)*
ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

45. அ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. *(அல்லது)*
ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

பகுதி - VI

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக :** **4 + 2 = 6**

47. அ) 'உண்டால் அம்ம.......' எனத் தொடங்கும் பாடலை எழுதுக.
ஆ) "செயல்" என முடியும் குறள்.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com